# ஜன.1 முதல் பிளாஸ்டிக் முழுமையாக தடை செய்யப்படும்

## சுற்றுச்சூழல் துறை அமைச்சர் உறுதி

திருச்சி, டிச.22: தமிழகத்தில் வருகிற ஜனவரி 1ம்தேதி முதல் பிளாஸ்டிக் முழுமையாக தடை செய்யப்படும் என்று திருச்சியில் அமைச்சர் கருப்பணன் நிருபர்களிடம் தெரிவித்தார்.

திருச்சியில் தமிழக சுற்றுசூழல் துறை அமைச்சர் கருப்பணன் நேற்று நிருபர்களிடம் தெரிவித்ததாவது: 1.1.2019 முதல் தமிழ்நாடு பிளாஸ்டிக் இல்லா மாநிலமாக உருவாக்கப்படும். தமிழ்நாட்டில் 6 மண்டலங்களாக பிரிக்கப்பட்டு வியாபாரிகள், உற்பத்தியாளர்கள், கல்வி நிறுவனங்கள், தொழிற்சாலை உரிமையாளர்கள், பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொள்ளும் கலந்துரையாடல் கூட்டம் நடத்தப்பட்டது. 6 மாத காலம் அவகாசம் ஏற்கனவே கொடுக்கப்பட்டு விட்டது. அரசு அலுவலர்களை உறுப்பினராக கொண்டு நியமிக்கப்பட்டு பிளாஸ்டிக் விழிப்புணர்வு கூட்டம் நடத்தப்பட்டு வருகின்றன. பிளாஸ்டிக் முழுமையாக தடை செய்யப்படும். பிளாஸ்டிக் பொருட்களுக்கு மாற்றாக விவசாயிகளுக்கு பயனுள்ள வகைகளில் பாக்கு மட்டை, பாக்குமர இலை, காகித சுருள், மண் குவளைகள் போன்ற பொருட்கள் பயன்படுத்தப்பட வேண்டும். பொதுமக்கள் சமூக ஆர்வலர்கள், தொழில் நிறுவனங்களின் உரிமையாளர்கள் முழு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்றார்.